**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி.

2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவராண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் மார்கழித்திங்கள் 02 ம் நாள்

**இடைநிலை மனு எண். 540/2024-ல்**

**அசல் வழக்கு எண்.100/2022**

ராமமூர்த்தி .... மனுதாரர் /வாதி

**//எதிர்//**

ராதாகிருஷ்ணன் .... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஜெ.பாலச்சந்தர், B.A., LL.B., அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.K.கோபாலகிருஷ்ணன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவில் மனுதாரர்/வாதி தரப்பில் காலத்தில் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 7 விதி 14 (3) -ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி. மேற்படி அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியின் தகப்பனார் சண்முகசுந்தரத்தை வளர்ப்பு மகனாக எடுத்து வளர்த்து வந்த செல்லம்மாள்

அவர்கள் கடந்த 21.05.1956 கிரயம் வாங்கப்பட்ட சொத்தாகும். மேற்படி மனுதாரரின் பாட்டி செல்லம்மாள் உயிருடன் இருந்த வரை ஆண்டு அனுபவித்து வந்த அவர் கடந்த 10.05.1992 ல் இறந்துவிட்டார். அவர் இறப்பிற்கு பிறகு மனுதாரரின் தந்தையாருக்கு வாரிசு என்ற அடிப்படையில் கிடைக்கப்பெற்ற சொத்தாகும். தந்தை சண்முகசுந்தரத்திற்கு மனுதாரரும், எதிர்மனுதாரரும் வாரிசுதாரர்கள் ஆவார்கள். மனுதாரர்/வாதியின் தந்தை இறப்பிற்கு பிறகு மனுதாரர்/வாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை பொருத்து கடந்த 14.08.2019 ல் பதிவு செய்யப்படாத தான செட்டில்மெண்ட் பத்திரம் ஒன்று எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி ஆவணத்தை வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ளார்.

மனுதாரர்/வாதியின் பாகத்தில் ஆண்டு அனுபவித்து வரும் நிலையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி அவ்வப்போது அத்துமீறி உள்ளே நுழைய எத்தணித்து வருகிறார். ஈந்த வழக்கிற்கு பிறகு நிகழ்வதால் அதனை இந்த மனுதாரர்/வாதி பல சட்ட நடவடிக்கைகளால் தடுத்து வருகிறார். அதற்கான ஆவணம் தற்போது தாக்கல் செய்யப்படுகிறது. மேற்படி ஆவணமான முதல் தகவல் அறிக்கை, குற்ற நடவடிக்கை ஏற்படாமல் இருக்க பிரிவு 107 வட்டாட்சியர் அவர்களிடம் நிலுவையில் இருக்கும் திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுக்கப்பட்ட புகார் ஆகிய ஆவணங்கள் காலத்தில் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்க உத்தரவிட வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் இருக்கிறது. இல்லாவிடில் மனுதாரர்/வாதிக்கு பெருத்த கஷ்டம், நஷ்டம் ஏற்பட்டுவிடும்.

ஆகையால் மனுதாரர்/வாதி தரப்பில் காலத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்க அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**3) <u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-</u>**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவும், ஆணையுறுதி ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகளும் அடிப்படை ஆதாரமற்ற பொய்யாகும். இதனடியில் வெளிப்படையாக இந்த எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் உண்மை என்று ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர்த்து இதர மனுவில் கண்ட சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்க தக்கதல்ல. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் ஏற்க கோரும் மனுவானது மனுதாரர்/வாதியால் அசல் வழக்கு தாக்கல் செய்ததற்கு பிற்பாடு வழக்கிற்காக மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்களாகும். மேற்படி ஆவணங்கள் வழக்கிற்கு பிந்தைய ஆவணங்கள் என்பதால் வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய இயலாது. எனவே மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் ஏற்க கோரும் மனுவினை இந்த எதிர்மனுதாரர்/பிரதிவாதி செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாரர் எதிருரையை தாக்கல் செய்துள்ளார்.

**4) இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

5) <u>தீர்வு</u>:-

1. மனு, நிரூபண வாக்குமூலம், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

2. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

3. இம்மனுவினை பரிசீலனை செய்கையில், அசல் வழக்கில் வாதியின் சட்டப்படியான உரிமையிலும், அமைதியான அனுபவத்திலும் இருந்துவரும் வழக்கு சொத்தில் பிரதிவாதியோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ எந்த வகையிலும் அத்துமீறி பிரவேசிக்காமல் இருக்கும் பொருட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர் வழக்குரை தாக்கல் செய்து, எழுவினாக்கள் வனையப்பட்டு, வாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிய வருகிறது.

4. மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டும் என்பதற்காக மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொள்ள கோரியுள்ளார். எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. வாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்ட நிலையில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் கூட தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் குறித்து குறியீடு செய்யும் சமயத்தில் ஆட்சேபணை தெரிவித்து மேற்கண்ட ஆவணம் குறித்து குறுக்கு விசாரணை செய்யவும் எதிர்மனுதாரருக்கு வாய்ப்புள்ளது என்பதாலும், மேற்படி ஆவணம் அசல் வழக்கிற்கு மிகவும் முக்கியமான ஆவணங்கள் என்று குறிப்பிட்டுள்ளதாலும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும், மனுதாரர்/வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிப்பது நீதியின்

நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலம், வழக்கின் நிலை ஆகியவற்றினை கருத்திற்கொண்டும் இம்மனுவினை அனுமதிக்கலாம் என்றும் தீர்மானிக்கிறது.

**6) முடிவில்**, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (17.12.2024 ) அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

<u>**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**</u>

**இருதரப்பிலும்** : இல்லை.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி.

2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவராண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் மார்கழித்திங்கள் 02 ம் நாள்

**இடைநிலை மனு எண். 540/2024-ல்**

**அசல் வழக்கு எண். 100/2022**

திரு.ராமமூர்த்தி, வயது 59, த/பெ.சண்முகசுந்தரம், இந்து, சிவமதம், வசிப்பிடம் எண்.4/730 தெற்கு தெரு, கர்ணாவூர் கிராமம், மன்னார்குடி முன்சிபி, மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

.... மனுதாரர்/வாதி

// எதிர்//

திரு.ராதாகிருஷ்ணன், வயது 62, த/பெ.சண்முகசுந்தரம், இந்து, சிவமதம், வசிப்பிடம் எண்.4/730 தெற்கு தெரு, கர்ணாவூர் கிராமம், மன்னார்குடி முன்சிபி, மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

.... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவில் மனுதாரர்/வாதி தரப்பில் காலத்தில் தாக்கல் செய்யாத தவறுதலை மன்னித்து தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 7 விதி 14 (3) -ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 08.11.2024

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 12.11.2024

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஜெ.பாலச்சந்தர், B.A., LL.B., அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.K.கோபாலகிருஷ்ணன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள்

பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. செலவுத்தொகை இல்லை.

2024 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.